(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். அச்சிட்ட பிரதிகள் பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்பெறும்.

(3) அரசினர் சட்ட முன்வடிவு.

ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(4) தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 105-ன் கீழ் திரு. சுவாமிநாதன் ஒரு தன்னிலை விளக்கம் அளிப்பார்கள்.

*திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முதல் நாள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது சிதம்பரத்தில் ஒரு ஒயின் ஷாப் திறப்புவிழா நடைபெறுகிறபோது அந்தத் திறப்பு விழாவிற்கு அந்த டி.எஸ்.பி., சிதம்பரம் டி.எஸ்.பி. அழைக்கப்படுகிறார், அந்த ஒயின் ஷாப் திறப்பு விழாவிற்கு அந்த டி.எஸ்.பி. தலைமை வகிக்கிறாரோ, முன்னிலை வகிக்கிறாரோ தெரியவில்லை, நம்முடைய ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர்கூட அந்த போட்டோவில் இருக்கிறார் என்று பேசியதோடு இன்றையதினம் முரசொலியிலும் ஒயின் ஷாப் திறப்பு விழாவில் கலந்து கொண்ட

1982 மார்ச் 29] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

டி.எஸ்.பி., ஆளும்கட்சி உறுப்பினர் என்று ஒரு புகைப்படமும் வெளியிட்டிருப்பதால் நான் இந்த அனுமதியைத் தங்களிடம் கோரினேன். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு சிதம்பரம் காசிக் கடைத் தெருவின் வழியாக சிதம்பரம் டெப்டி கெலக்டர் அலுவலகத்திற்குச் செல்கிறபோது அங்கே தெருவில் உள்ள போக்குவரத்து நெரிசலில் என்னுடைய கார் நிறுத்தப்படுகிறது. அப்போது சிதம்பரம் டி.எஸ்.பி. அங்கே நிற்கிறார். நான் அவரைப் பார்த்து கார் மேலே போகமுடியாமல் இறங்கியபோது எடுத்த படம்தான் அது. அந்த ஒயின் ஷாப் திறப்புவிழாவில் நான் கலந்து கொள்ளவோ அல்லது தலைமை வகிக்கவோ இல்லை. அந்தத் திறப்புவிழாவில் நான் எந்தவிதத்திலும் கலந்துகொள்ளவில்லை. டி.எஸ்.பி. அவர்களோடு ஆளும் கட்சி உறுப்பினர் இதுமாதிரி அனுசரணையாக இருக்கலாமா என்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த டி.எஸ்.பி.க்கு ஆளும் கட்சி உறுப்பினர் யாரும் எந்த விதத்திலும் அனுசரணையாக இல்லை. அந்த ஒயின் ஷாப் உரிமையாளர் பேரவைத் தலைவர் அவர்களுக்கு தன் சொந்த கைப்பட எழுதி கையெழுத்துப்போட்ட கடிதத்தையும் டைப் செய்து கையெழுத்து போட்ட கடிதத்தையும் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். அதை வாசிக்க தங்கள் அனுமதி கோருகிறேன்

''மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கமாய் சத்திய பிரமாணமாய் தெரிவித்துக் கொள்வதாவது, அனுப்புதல்: சி. ஆர். விஜயகுமார், த/பெ. ராஜமாணிக்கப் பத்தர், காசுக்கடைத் தெரு, சிதம்பரம் டவுன். ஐயா, நான் சிதம்பரம் டவுனில் காசுக்கடைத் தெருவில் ஒயின் ஷாப் கடையை யாருக்கும் சொல்லாமல் திறந்தேன். எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் குறிப்பாக சிதம்பரம் தொகுதி, புவனகிரி தொகுதி அ.இ. அண்ணா தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்கள் யாரும் திறப்பு விழாவிற்கு வரவில்லை. நான் அழைக்கவுமில்லை. யார் தலைமையிலும் முன்னிலையிலும் திறப்பு விழா நடத்தவுமில்லை. சுமார் 12 மணிக்கு அந்த குறுகலான கடைத் தெருவில் போக்குவரத்து நெரிசலாக இருந்தது. அப்பொழுதிருந்த போலீஸ் டி.எஸ்.பி. ஜோசப் அவர்கள் வந்து போக்குவரத்து வாகனங்களை ஒழுங்கு படுத்தினார். அப்பொழுது புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் சிதம்பரம் டிபுடி கலெக்டர் ஆபீசுக்கு போகிறபோது கூட்டத்தைப் பார்த்து இறங்கினார்கள். அப்பொழுது நடு ரோட்டில் எடுத்த போட்டோவைத் தான் சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் காட்டினார் என்று நம்புகிறேன். எனது ஒயின் கடைக்குள்ளோ அல்லது பக்கமோ சட்ட மன்ற உறுப்பினர் வரவில்லை. எந்த விழாவும் நடத்தவில்லை, அதில் கலந்து கொள்ளவுமில்லை என்பதை தங்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். ''உண்மையுள்ள சி. ஆர். விஜயகுமார்.''

வணக்கம்.